**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப.,**

ந.க.உ4/27861/2018 நாள்: 07.12.2018

---

பொருள் :: **உள்ளூர் விடுமுறை — திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் - திருவானைக்காவல் - அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் குடமுழுக்கு 12.12.2018 அன்று புதன்கிழமை நடைபெறுவது - உள்ளூர் விடுமுறை அளித்து ஆணையிடுதல்.**

பார்வை :: 1) அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில், உதவி ஆணையர்/செயல் அலுவலர் அவர்களின் கடிதம் எண். ந.க.எண்.53/1428/அ6, நாள் 02.11.2018
2) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண் ந.க.உ4/27861/2018, நாள் 19.11.2018
3) அரசாணை (1டி) எண்.367 பொது (பல்வகை)த் துறை, நாள் 07.12.2018

❀❀❀❀

**ஆணை::**

அரசாணை (1டி) எண். 367 பொது (பல்வகை)த் துறை, நாள்: 07.12.2018-ல் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப.,** என்கிற நான், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் "குடமுழுக்கு" விழாவை முன்னிட்டு வருகிற 2018-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ஆம் நாள் (புதன்கிழமை) **(12.12.2018) உள்ளூர் விடுமுறை** என அறிவிக்கிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கும் இது பொருந்தும். ஆயினும், பள்ளி/கல்லூரி தேர்வுகள் நடைபெறுவதில் இந்த விடுமுறை பொருந்தாது.

2.மேற்கண்ட விடுமுறைக்கு பதிலாக வருகிற 2018-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இருபத்தி ஒன்பதாம் நாள் **(29.12.2018)** சனிக்கிழமை வேலை நாள் என அறிவிக்கப்படுகிறது.

..2..

3. பத்தி 1-இல் அறிவித்த விடுமுறையானது செலவாணி முறிச் சட்டம் 1881 (Under Negotiable instruments Act, 1881) ன் கீழ் அறிவிக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட விடுமுறை நாளில் அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு மாவட்டத்தில் உள்ள கருவூலம், சார்நிலை கருவூலங்களும், குறிப்பிட்ட பணியாளர்களை கொண்டு செயல்படும்.

4. திருச்சிராப்பள்ளி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மேற்கண்ட அறிவிப்பினை செய்திதாள்களிலும், தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலியிலும் விளம்பரம் செய்து அதன் விவரத்தினைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்./- கு.இராசாமணி
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

/உத்திரவுப்படி/

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
திருச்சிராப்பள்ளி.
07/12/18

07/12/18

பெறுநர்:

1.அனைத்து சார்நிலை அலுவலர்கள்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2.மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி,
மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்),
உசூர் தலைமை உதவியாளர் (உ-பிரிவு)

3.பொதுமக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி

4.உசூர் தலைமை உதவியாளர் (சி-பிரிவு)
(மேற்படி சிறப்பு நிகழ்வினை திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழில் வெளியிட அறிவுறுத்தப்படுகிறார்.)